சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.103/2024

18.03.2026

வா.சா. 2 திரு. துரை, த/பெ. கோவிந்தசாமி

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனது தகப்பனாருக்கு 4 பிள்ளைகள் என்றால் சரிதான். மூத்த மகன் பெயர் பழனிவேல் என்றால் சரிதான். இரண்டாவது மகன் அழகுசுந்தரம், மூன்றாவது வாரிசு நான், நான்காவது வாரிசு பாலதண்டாயுதபாணி ஆகும். எனது தகப்பனார் 1997 ல் இறந்தார். தாவா சொத்துக்கள் எனது தகப்பனார் காலத்தில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அவரவர் சம்பாதித்து சொத்துக்களை வாங்கினோம். தாவா சொத்துக்கள் எனது தகப்பனார் வருமானத்தில் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தையும் மற்ற சொத்தையும் சேர்த்து எனது தகப்பனார் திருவாரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 3 நபர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் இல்லை. எனது தகப்பனார் இறந்த பின்னிட்டு அந்த நடந்தது என்றாலும் அதில் நான் சாட்சியமளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வாதி 2005 ஆம் வருடத்திலிருந்து கூடூர் கிராமத்தில் வசித்து வருகிறார். தாவா சொத்து வாங்கிய காலத்திலிருந்தே வாதி கூடூர் கிராமத்தில் வசித்து வருகிறார் என்றாலும் தாவா சொத்துள்ள கிராமத்தில் வசிக்கவில்லை என்றாலும் சரியல்ல. நானும் வாதியும் ஒரு தரப்பினராகவும் பாலதண்டாயுதபாணியும், பழனிவேலும் ஒரு தரப்பினராக இருந்து வருகிறோம் என்றால் இல்லை. அ.வ.எண்.16/2023 என்ற எண்ணில் திருவாரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நான் பழனிவேல் மீது தாக்கல் செய்துள்ளேன். மற்றொரு வழக்கு அ.வ.எண்.108/2024 என்ற எண்ணில் பாகபிரிவினைக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அழகுசுந்தரம் தான் தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் எதிர்வாதம் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கும் பாகம் கிடைக்கும் என்பதால் நான் அந்த வழக்கில் எதிர்வாதம் செய்யவில்லை. அ.வ.எண்.16/2023 வழக்கில் அழகுசுந்தரம் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் எனக்கு ஆதரவாக அழகுசுந்தரநாதன் சாட்சியமளித்துள்ளதால் அந்த வழக்கில் நான் அவருக்கு ஆதரவாக சாட்சியமளித்துள்ளேன் என்றால் இல்லை. வாதி 1 ஏக்கர் 1 செண்டிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தின் சர்வே எண்224/1பி மற்ற 3 சர்வே எண்கள் எனக்கு தெரியவில்லை. தாவா சொத்தில் வீடு கட்டி சுமார் 27 வருடங்கள் இருக்குமா என்றால் 10 வருடங்கள் தான் இருக்கும். 10 வருடங்களாக 1 ஆம் பிரதிவாதி தாவா சொத்தில் உள்ள வீட்டில் தான் குடியிருந்து வருகிறார். 1 ஆம்

பிரதிவாதிக்கு தாவா சொத்தில் உள்ள வீட்டு முகவரியில் தான் ஆதார் அட்டை, குடும்ப அட்டை உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தில் உள்ள 1 ஏக்கர் 1 செண்ட் நிலத்தை அவர் விருப்பப்படி ஒவ்வொரு வருடமும் ஒவ்வொருவருக்கு சாகுபடி செய்யக்கொடுப்பார். வாதி தாவா சொத்தில் சாகுபடி செய்துள்ளாரா என்றால் செய்துள்ளார், எந்த வருடம் என்று எனக்கு தெரியவில்லை. வாதி தாவா சொத்தில் சாகுபடி செய்தார் என்பதை காட்ட ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. என்ன ஆவணம் வைத்துள்ளார் என்று எனக்கு தெரியாது. வாதி பெயரில் நெல் விற்பனை செய்திருப்பதாக ரசீது வழங்கப்பட்டிருப்பதை நான் பார்த்திருக்கிறேனா என்றால் இல்லை. தாவா சொத்திற்குண்டான கிராம சாகுபடி அடங்கலை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். தாவா சொத்திற்குண்டான அடங்கலில் அந்த அந்த வருடம் யார் விவசாயம் செய்வார்களோ அவர்கள் பெயர் உள்ளது. தாவா சொத்தில் வெவ்வேறு நபர்கள் பயிர் செய்த வகையில் அவர்கள் பெயர் அடங்கலில் உள்ளதா என்றால் உள்ளது. நான் வாதிக்கு ஆதரவாக அடிப்படையின்றி பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் இல்லை. வெவ்வேறு நீதிமன்றங்களில் நானும் அழகுசுந்தரமும் ஒரு தரப்பினராகவும் 1 ஆம் பிரதிவாதியும், பழனிவேலும் ஒரு தரப்பினராகவும் இருந்து வழக்கு நடத்திவருகிறோம் என்றால் சரியல்ல. நான் பழனிவேலை அடித்ததாக என் மீது குற்ற வழக்கு இருந்தது என்றால் சரிதான். அந்த வழக்கு தற்போது முடிந்துவிட்டது நான் சொல்வது போல் குற்ற வழக்கு முடியவில்லை என்றாலும் நிலுவையில் உள்ளது என்றாலும் சரியல்ல. தற்போது தாவா சொத்தை 1 ஆம் பிரதிவாதி தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. வாதியிடம் அனுபவம் உள்ளது. தாவா சொத்தை சுவாதீனம் கேட்டு வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் இல்லை.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.